 දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
Inland Revenue Department

## வரிசெலுத்துநர்களுக்கான அறிவித்தல்

# முற்பண வருமான வரி (AIT)
# நிறுத்தி வைத்தல் வரி (WHT)
# முற்பண தனியாள் வருமான வரி (APIT)

**2026 ஆகஸ்ட் மாதத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட, பின்வரும் வரிக் கொடுப்பனவுகளை 2026 செப்டம்பர் 15 அன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்த வேண்டும் என்பதனை நினைவூட்டுகின்றோம்.**

கொடுப்பனவுக்கான **வரி வகை குறியீடு** மற்றும் **கொடுப்பனவு காலப்பகுதிக் குறியீடு** ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| வரி வகை | வரி வகை குறியீடு | கொடுப்பனவு காலப்பகுதி குறியீடு | கொடுப்பனவு வகை |
|---|---|---|---|
| வட்டி மீதான முற்பண வருமான வரி (AIT)/ நிறுத்திவைத்தல் வரி (WHT) | 43 | 26080 | S |
| கட்டணங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் மீதான முற்பண வருமான வரி (AIT)/ நிறுத்திவைத்தல் வரி (WHT) | 44 | 26080 | S |
| முற்பண தனியாள் வருமான வரி (APIT) | 03 | 26080 | S |

- செலுத்த வேண்டிய வரிகளை இணையவழி வரிக் கொடுப்பனவு தளத்தினூடாக (OTPP) செலுத்த ஊக்குவிக்கப்படுகின்றீர்கள். மேலதிக விபரங்களுக்கு https://www.ird.gov.lk/en/publications/SitePages/Online_Pay_OTP.aspx?menuid=141601 மற்றும் User Guide for Online Tax Payments Platform (OTPP) இனை பார்க்கவும்.
- அதபோல், **APIT** க்கான கொடுப்பனவுகளை **இலங்கை வங்கியின்** எந்தவொரு கிளையிலும் செலுத்தலாம். **AIT/WHT** க்கான கொடுப்பனவுகளை **மக்கள் வங்கியின்** எந்தவொரு கிளையிலும் செலுத்தலாம்.
- வங்கி கிளையில் கொடுப்பனவினைச் செலுத்தும்போது, முன் அச்சிடப்பட்ட கொடுப்பனவு நறுக்குகளை பயன்படுத்தவில்லை எனின், கொடுப்பனவினை மேற்கொள்வதற்குத் தேவையான DIN இலக்கத்தினை, https://eservices.ird.gov.lk/Payment/PayingInSlip/Index என்ற இணைப்பின் மூலம் அல்லது **0112134780** என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்வதன் மூலம் பெற்றுக்கொண்டு, கொடுப்பனவு நறுக்கில் குறிப்பிடவும்.
- **வரியை செலுத்தாது விடுதல்** அல்லது **தாமதமாக செலுத்துதல்** மீதான தண்டம் விதிக்கப்படும் என்பதனை கவனத்தில் கொள்ளவும்.
- கொடுப்பனவுக்குரிய **இறுதித் திகதிக்குப் பின்னர்**, **வங்கி வரைவோலை** அல்லது **கொடுப்பனவுக் கட்டளை தீர்வையாகும் போதும்**, தாமதமான செலுத்துதல் எனக் கருதப்படும்.

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**